FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8301663

1. District : தேனி மாவட்டம் — காவல்நிலையம் — Year: 2026 ஆண்டு — FIR No.: 15 முத.அ. எண் — Date: 18/07/2026 நாள்

2. (i) Act சட்டம்: 106 BNSS — Sections பிரிவுகள்: 106
   (ii) Act சட்டம்: Prevention of Corruption — Sections பிரிவுகள்: 7(a) and 7(b)
   (iii) Act சட்டம்: Act 1988 (as amended in 2018) — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 17/7/26 — Date to : நாள் வரை 17/7/26
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 17.00 hrs — Time to : நேரம் வரை 21.30 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18/7/26 — Time : நேரம் 17.00
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் தேனியிலிருந்து 2 km கிழக்கு அல்லிநகரம்
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி உட்கோட்டாட்சியர் அலுவலகம் கிழக்கு வட்டம், தேனி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தி. சரவணன் — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் தங்கவேல்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 20/7/74 — (d) Nationality : நாட்டினம் இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் தனியார் அலுவலர் — (g) Address : முகவரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் தேனி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   தெரியாது / இணைக்கப்படவில்லை

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   தாமதமில்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet If necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

18.7.2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

18.7.2026

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் G. MANIKANNAN.
Rank: நிலை DSP/Vel. எண் .....
CMCH.

கனம் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.15/2026–ன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 7–ன் தொடர்ச்சி.....

1) திரு.சங்கர், வயது 30/2026, த/பெ கண்ணன், புல உதவியாளர், வட்டாட்சியர் அலுவலகம், திருச்சி கிழக்கு வட்டம்.

2) திருமதி.பரிமளா, வயது 40/2006, த/பெ பாலமுத்து, க/பெ சுதாகர், நில அளவை சார் ஆய்வாளர், Ward- AU, AT, AS, AI, AP, AQ, AH, வட்டாட்சியர் அலுவலகம், திருச்சி கிழக்கு வட்டம்.

3) திரு.சரவணன், வயது 34/2026, த/பெ தர்மலிங்கம், நில அளவை சார் ஆய்வாளர், Ward- N, O, Q, E, V, AE, U, வட்டாட்சியர் அலுவலகம், திருச்சி கிழக்கு வட்டம்.

4) திருமதி.சுமித்ரா, நில அளவை சார் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், திருச்சி கிழக்கு வட்டம்.

5) திரு.சித்தார்தன், வயது 55/2026, த/பெ குப்புசாமி, வட்ட துணை ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், திருச்சி கிழக்கு வட்டம்.

திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.15/2026–ன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12–ன் தொடர்ச்சி.....

திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளராகிய நான், இன்று (18.07.2026) பணியில் இருந்தபோது, மாலை 17.00 மணியளவில் திரு.T.சுரேஷ், த/பெ தங்கவேலு, முதுநிலை வருவாய் ஆய்வர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், திருச்சி மாவட்டம் என்பவர் திருச்சி கிழக்கு தாலுக்கா அலுவலகத்தை 17.07.2026 அன்று திடீர் சோதனை செய்தபோது தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகளின்படி நடவடிக்கை எடுக்குமாறு நிலையம் ஆஜராகி இன்று (18.07.2026) கொடுத்து புகார்மனுவினை பெற்று இரகசிய விசாரணை மேற்கொண்டும், சட்ட வல்லுனரின் ஆலோசனையின் பெற்றும், சென்னை, ஊழல் தடுப்பு கண்காணிப்பு துறை இயக்குநரக உத்தரவின்பேரில் இன்று வழக்கு பதிவு செய்யப்படுகிறது. திரு.T.சுரேஷ் அவர்கள் கொடுத்த புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. திருச்சி 18.07.2026 அனுப்புநர் திரு.T.சுரேஷ், த/பெ தங்கவேலு, முதுநிலை வருவாய் ஆய்வர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், திருச்சி மாவட்டம். பெறுநர் காவல் துணைக்கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு

பிரிவு, திருச்சி. ஐயா, திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், 17.07.2026 அன்று மாலை சுமார் 17.00 மணியளவில், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரால் நியமிக்கப்பட்ட முதுநிலை வருவாய் ஆய்வராகிய என் தலைமையில், திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு.கோ.மணிகண்டன் மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் திருச்சி கிழக்கு தாலுக்கா அலுவலகத்தை திடீர் சோதனை மேற்கொண்டோம். மேற்படி சோதனையின்போது, தாலுக்காக அலுவலகத்தில் உள்ள அலுவலர்களை விசாரித்து அவர்களிடம் உள்ள தொகை மற்றும் அவர்களுடைய கைபேசியில் உள்ள UPI Transaction வங்கி பரிவர்த்தனை விபரங்கள் திடீர் சோதனை செயல்முறையில் குறிக்கப்பட்டது. மேலும் தாலுக்கா அலுவலகத்தின் முதல் தளத்தில் உள்ள நில அளவை பிரிவில் பணியில் இருந்த புல உதவியாளர் திரு.சங்கரிடம் உள்ள அவரது கைபேசி எண்.7418049763 என்ற எண்ணுடன் இணைக்கப்பட்ட G-pay விபரங்களை சந்தேகத்தின்பேரில் ஆய்வு செய்ய, அவர் கடந்த 2026–ஜனவரி முதல் 2026–ஜூலை வரை ரூ.6,25,000/– தனி நபர்களிடமிருந்து UPI Transaction ஆக ரொக்கங்கள் பெறப்பட்டது தெரியவந்தது. அது குறித்து திரு.சங்கர் என்பவரிடம் கேட்க எவ்வித விளக்கமும் கூறாமல் மௌனமாக இருந்தார். புல உதவியாளர் திரு.சங்கர், நில அளவை செய்யவும் / செய்து கொடுத்ததற்காகவும் பொதுமக்களிடமிருந்து கையூட்டு பணத்தை கேட்டு அப்பணத்தை UPI Transaction ஆக பெற்றிருக்கலாம் என்று சந்தேகப்பட்டு, ஆய்வு செய்ய, அது சங்கரின் வங்கி கணக்கு உள்ள Indian Bank, Viralimalai Branch, Pudukottai District தொடர்புடையதாக இருந்தது. மேலும், புல உதவியாளர் திரு.சங்கர் மேற்படி தொகையை தன்னுடைய UPI Transaction மூலம் அதே பிரிவில் பணிபுரியும், உதவி சார் ஆய்வாளர்கள் திரு.சரவணன், திருமதி.பரிமளா, திருமதி.சுமித்ரா மற்றும் வட்ட துணை ஆய்வாளர் திரு.சித்தார்தன் ஆகியோர்களின் UPI Transaction வங்கி கணக்குகளுக்கு அனுப்பப்பட்டு பகிரப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது. இது குறித்து, மேற்படி திரு.சித்தார்தன், திருமதி.பரிமளா, திரு.சரவணன் ஆகியோர்களிடம் கேட்க அவரவர்கள் சரிவர விளக்கம் கூறாமல் மௌனமாக இருந்தனர். அதேபோல், நில அளவை பிரிவில் இருந்த, நில அளவை சார் ஆய்வாளர் திரு.சரவணனிடம் உள்ள அவரது கைபேசி எண்.9629828207 என்ற எண்ணுடன் இணைக்கப்பட்ட G-pay விபரங்களை சந்தேகத்தின்பேரில் ஆய்வு செய்ய கடந்த 2026–ஜனவரி முதல் 2026–ஜூலை வரை ரூ.1,65,000/– தனி நபர்களிடமிருந்து UPI Transaction ஆக ரொக்கங்கள் பெறப்பட்டது தெரியவந்தது. அது குறித்து திரு.சரவணனிடம் கேட்க எவ்வித விளக்கமும் கூறாமல்

மௌனமாக இருந்தார். நில அளவை செய்து கொடுக்கவும் / செய்து கொடுத்ததற்காகவும் பொதுமக்களிடமிருந்து கையூட்டு பணத்தை கேட்டு UPI Transaction மூலம் பெற்றிருக்கலாம் என்று சந்தேகப்பட்டு, ஆய்வு செய்ய, அது சரவணனின் வங்கி கணக்கு உள்ள SBI, Musiri Branch, Trichy District தொடர்புடையதாக இருந்தது. அதேபோல், நில அளவை பிரிவில் இருந்த, நில அளவை சார் ஆய்வாளர் திருமதி.பரிமளாவிடம் உள்ள அவரது கைபேசி எண்.8012808094 என்ற எண்ணுடன் இணைக்கப்பட்ட G-pay விபரங்களை சந்தேகத்தின்பேரில் ஆய்வு செய்ய கடந்த 2026–ஜனவரி முதல் 2026–ஜூலை வரை ரூ.4,50,000/– தனி நபர்களிடமிருந்து UPI Transaction ஆக ரொக்கங்கள் பெறப்பட்டது தெரியவந்தது. அது குறித்து திருமதி.பரிமளாவிடம் கேட்க எவ்வித விளக்கமும் கூறாமல் மௌனமாக இருந்தார். நில அளவை செய்து கொடுக்கவும் / செய்து கொடுத்ததற்காகவும் பொதுமக்களிடமிருந்து கையூட்டு பணத்தை கேட்டு UPI Transaction மூலம் பெற்றிருக்கலாம் என்று சந்தேகப்பட்டு, ஆய்வு செய்ய, அது பரிமளாவின் வங்கி கணக்கு உள்ள Canara Bank, Collectorate Branch, Trichy தொடர்புடையதாக இருந்தது. அதேபோல், நில அளவை பிரிவில் இருந்த, வட்ட துணை ஆய்வாளர் திரு.சித்தார்தனிடம் உள்ள அவரது கைபேசி எண்.7904182381என்ற எண்ணுடன் இணைக்கப்பட்ட Phone-pay (SBI, Virudhachalam Branch, Cuddalore District) விபரங்களை சந்தேகத்தின்பேரில் ஆய்வு செய்ய கடந்த 2026–ஜனவரி முதல் 2026–ஜூலை வரை, புல உதவியாளர் திரு.சங்கரின் கைபேசி எண்.7418049763 பதிவுள்ள வங்கி கணக்கு உள்ள UPI Transaction மூலம் ரொக்கங்கள் பெறப்பட்டுள்ளது தொடர்பாக கேட்க எவ்வித விளக்கமும் கூறாமல் மௌனமாக இருந்தார். நில அளவை செய்து கொடுக்கவும் / செய்து கொடுத்ததற்காகவும் பொதுமக்களிடமிருந்து கையூட்டு பணத்தை கேட்டு அப்பணத்தை புல உதவியாளர் திரு.சங்கரின் UPI Transaction மூலம் பெற்றிருந்தது தெரியவந்தது. மேற்படி தாலுக்கா அலுவலக தரைத்தளத்தில் உள்ள வட்ட வழங்கல் அலுவலகத்தில் நின்றிருந்த நபரைப்பற்றி கேட்க, அவர் தன்னுடைய பெயர் திரு.மதுபாலன், வயது 30/2026 த/பெ. ஆசைத்தம்பி, காந்தி மார்க்கெட் ரேசன் கடை விற்பனையாளர் என்று தெரிவித்தார். மேலும் அவரிடமிருந்த ரூ.3,000/– தொகையை பற்றிகேட்க, அவர் எதுவும் சொல்லாமல் மௌனமாக இருந்தார். எனவே மேற்படி தொகை சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. அதே அறையில் இருந்த நபரைப்பற்றி கேட்க, அவர் தன்னுடைய பெயர் திருமதி.ராஜலெட்சுமி, வயது 47/2026, க/பெ. கருப்பசாமி, BLO Staff, 148, பாரதி நகர், 4வது தெரு, சங்கிலியாண்டபுரம், திருச்சி என்று தெரிவித்தார். மேலும் அவரிடமிருந்த ரூ.4,000/– தொகையை பற்றிகேட்க,

அவர் எதுவும் சொல்லாமல் மௌனமாக இருந்தார். எனவே மேற்படி தொகை சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின் நடவடிக்கையில், வங்கி பரிவர்த்தனை விபரங்கள் மகஜரில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும், திடீர் சோதனை நடவடிக்கைகள் அனைத்தும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து கொண்டுவரப்பட்ட வீடியோ காமிரா மூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த செயல்முறையின் அடிப்படையில் இதில் கூறப்பட்டுள்ள நில அளவை சார் ஆய்வாளர்கள் திரு.சரவணன், திருமதி.பரிமளா, திருமதி.சுமித்ரா, புல உதவியாளர் திரு.சங்கர் மற்றும் வட்ட துணை ஆய்வாளர் திரு.சித்தார்தன் ஆகியோர்கள் பொதுமக்களிடம் அவர்கள் செய்த, செய்யவேண்டிய அரசுப்பணிகளுக்காக கையூட்டுப்பெற்றதும், அவர்கள் ஒருவருக்கொருவர் UPI Transaction மூலம் பெற்ற தொகைகளை பகிர்ந்து கொண்டதும் தெரியவருவதால் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்துடன் கடந்த 17.07.2026 அன்று கிழக்கு தாலுக்கா அலுவலகத்தில் தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகள் (மகஜர்) இணைத்துள்ளேன். இப்படிக்கு (Sd.xxxx) 18.7.2026, (த.சுரேஷ்), Submitted to the Court of the Hon'ble Principal District and Sessions Judge, Tiruchirappalli. The report, along with the Surprise Check Mahazar drawn on 17.07.2026 were received and duly perused. A confidential enquiry was conducted and based on instructions received from the DVAC, a case was registered in Trichy V&AC, Cr. No.15/2026, u/s 106 of the BNSS r/w 7(a) and 7(b) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018), on 18.07.2026 at 18.00 hrs. (Sd.xxxx), 18/07/2026, (G.MANIKANDAN) DSP, V&AC, Trichy.

18/07/2026
(G.MANIKANDAN)
DSP. V&AC
TRICHY.